காட்டுகிறோம் என்று ஒப்புக்கொண்டார்கள். ஆனால் அந்த ஜனநாயக வரம்பை மீறி அவர்கள்தான் கலகத்தை விளைவிக்க முனைந்தார்கள். சாலைகளிலே யாருமே செல்லமுடியாத நிலைமையை உருவாக்கினார்கள். எதிலும் ஈடுபடாத பொதுமக்கள் துன்புறுத்தப்படுகிற வேலையைச் செய்தவர்கள் அவர்கள்தான்.

ஏறத்தாழ 50,000 தொண்டர்கள், வடபுறத்திலேயிருந்து சென்ற தோழர்கள் வடபுறத்திலும், தென்புறத்திலேயிருந்து சென்ற தோழர்கள் தென்புறத்திலேயும் நிறுத்தப்பட்டிருந்தார்கள். இடையில் கறுப்புக்கொடி காட்ட வந்த கலகக்காரர்கள் கூடியிருந்தார்கள். நேற்று முன்தினம் என்று கருதுகிறேன், இங்கே பேசிய உறுப்பினரொருவர் இதில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் மிகப்பெரிய அராஜகத்தில் ஈடுபட்டதாகப் பேசினார்கள். அவர்களுக்கே தெரியும். நாங்கள் 50,000 பேர்கள் கூடியிருந்தோம். அது, அறிக்கைவிட்ட பட்டுக்கோட்டை சட்ட மன்ற உறுப்பினருக்கும் நன்றாகத் தெரியும். அவர்கள் 5,000 பேர்கள்தான் இருந்தார்கள். நாங்கள் இருபுறமும் சூழ்ந்திருந்தோம். நாங்கள் நினைத்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் இங்கே பேசிக் கொண்டிருக்கும் நிலையே கூட இருந்திருக்காது.

இவ்வளவுக்கும் பிறகும் கட்டுப்பாட்டோடு அந்தத் தோழர்கள் இருந்தார்கள் என்றால் அதற்கு மிகப்பெரிய காரணம் ஒன்றிருக்கிறது. நாங்கள் அவர்களை அடித்தாலும் அல்லது அவர்கள் எங்களை அடித்தாலும் அங்கே சிந்தும் இரத்தம் தமிழினத்தின் இரத்தம் அந்த இரத்தம் வேறு இன இரத்தமாக இருக்க முடியாது. பாதிக்கப்படும் மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அல்லது எதிர்த் தரப்பிலே இருப்பவர்களாக இருந்தாலும் அவர்கள் தமிழக மக்களே தவிர வேற்று மாநில மக்கள் அல்ல என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் உணர்ந்து அமைதியாக இருந்தார்கள்.

அதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அவர்கள் விரித்த வலையில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் விழுவதற்குத் தயாராக இல்லை. அங்கே இரண்டுபேர்களுக்கும் இடையே

1973 மார்ச் 6] [திரு. எல். கணேசன்]

சண்டை நடக்கும், அதனால் துப்பாக்கிச் சூடு நடைபெறும், ஏதாவது பிணங்கள் விழும், அந்தப் பிணங்களை எடுத்து வைத்துக் கொண்டு, பார் பார், திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொடுமையைப் பார் என்று சொல்லலாம் என்று திட்டமிட்டுக் கலகம் விளைவித்தார்கள்.

எனவேதான், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் எவ்வளவுதான் ஆத்திரமூட்டப்பட்டாலும், உணர்ச்சி தூண்டி விடப்பட்டாலும், எங்களுடைய மனத்தைப் புண்படுத்தி விட்டாலும் நாங்கள் அமைதி காத்தோம்.

அதுமட்டுமல்லாமல், அவர்கள் வழி மறித்திருக்கின்ற சாலைகளில்லை லாரிகள் செல்ல வேண்டாமென்பதற்காக, வடபுறத்திலேயிருந்து வந்த லாரிகளைத் திருப்பி குறுக்கு மார்க்கமாகச் சென்ற பொழுதுகூட இங்கேயிருந்த சாலையை மறித்த அவர்கள் மீண்டும் ஓடி வந்து எங்களை மறித்தார்கள். இவர்கள் கொடி பிடிக்க வேண்டிய இடம் முக்கிய சாலை. அங்கே மறித்துக்கொண்டிருக்கிறார்கள், எனவே அங்கே சென்றால் கலகம் ஏற்படும் என்று நாங்கள் ஒதுங்கிவந்தாலும், அப்படி வந்தவர்களை மீண்டும் வழி மறித்துத் தாக்கியவர்கள் அவர்களே அல்லாமல் நாங்கள் அல்ல. என்ன காரணமோ தெரியவில்லை, அந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி அறிக்கை விட்டிருக்கிறார்கள்.

இன்னொன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விலைவாசிகளைப் பொறுத்தவரையில் இங்கே பேசுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், நிரம்பப் படித்தவர்கள்கூடப் பேசுகிறார்கள். இன்னும் அதில் வேடிக்கை என்னவென்றால், அவர்கள் அதிகம் படித்தவர்கள் என்ற நம்பிக்கையோடுகூடப் பேசுகிறார்கள். விலைவாசி ஏற்றத்திற்கு மாநில அரசு எவ்வளவு பொறுப்பாக இருக்க முடியும்? விலைவாசியேற்றத்தின் அடிப்படைக் காரணங்களில் ஒன்று பற்றுக்குறை நிதிநிலை அறிக்கையாகும்.)

Deficit financing and inflationary policies are the main causes for rising prices over which the State Government have no role whatsoever. எனவே, நிச்சயமாகத் தெரியும், இங்கே பேசுபவர்களுக்குக்கூடத் தெரியும், பற்றுக்குறை பட்ஜெட் போடுவது ஆண்டுதோறும் மத்திய அரசுதான்.